பக்கங்கள் 17+2

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 09 திங்கட்கிழமை 25.08.2025 | அதிர்வு 25

## யாழ். பாடசாலைகள் வரும் சனி இயங்கும்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் எதிர்வரும் சனிக் கிழமை இயங்கும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# யாழில் மீண்டும் ஒன்றிணைந்த தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள்

## செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச விசாரணை கோரி வரும் 29ஆம் திகதி கையெழுத்துப் போராட்டம் என அறிவிப்பு





(எஸ்.நிதர்ஷன்)

**செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச விசாரணை கோரி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 29ஆம் திகதி கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.**

**யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இன்று நடத்திய கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.**

**ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., சமத்துவக் கட்சியின் தலைவர் முருகேசு சந்திரகுமார், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் ஆகியோருடன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ சுமந்திரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இந்த ஊடக சந்திப்பில் பங்கேற்றனர்.**

இதன்போது அவர்கள் கூட்டாக மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையில் பல்வேறு இடங்களில் மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலான மனிதப் புதைகுழிகள் வடக்கு, கிழக்கில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுக்கு என்ன நடந்தது என யாருக்கும் தெரியாது.

தற்போது செம்மணி மனிதப் புதைகுழிகளில் அகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. அதில் 140 இற்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் 90 வீதமானவை ஆடைகள் அற்ற நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் குழந்தைகளின் எலும்புக் கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

அவற்றுக்குச் சர்வதேச விசாரணை வேண்டும் எனக் கோரியும், சர்வதேச நிபுணர்களின் கண்காணிப்பில் அகழ்வுப் பணிகள் முன்னெக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிக்கும் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.



# இராணுவ முகாம்களை அகற்றக் கோரி பருத்தித்துறையில் மாபெரும் போராட்டம்

## மக்களுடன் பல கட்சிகளின் உறுப்பினர்களும் பங்கேற்பு

**(எஸ்.ரகுதீஸ், எஸ்.நிதர்ஷன்)**

பருத்தித்துறை நகர சபை எல்லைக்குள் காணப்படும் இராணுவ முகாம்களை அகற்றுமாறு வலியுறுத்தி பருத்தித்துறையில் இன்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

“பருத்தித்துறை நகரைப் பாதுகாப்போம்“ என்ற தொனிப்பொருளில் பருத்தித்துறை நகரில் உள்ள சில இராணுவ முகாம்களை அகற்றுமாறு வலியுறுத்தி பருத்தித்துறை நகர பிதா டக்ளஸ் போல் தலைமையில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் அமைந்துள் இராணுவ முகாம், வெளிச்சவீட்டை ஆக்கிரமித்து அமைந்துள்ள கடற்படை முகாம் என்பன போருக்குப் பின்னரான நகரின் வளர்ச்சிக்குப் பாரிய தடைக்கற்களாக உள்ளன.

பருத்தித்துறை நகரின் வளர்ச்சி கருதியும் பருத்தித்துறை வாழ் மக்களின் நன்மை கருதியும் மேற்குறித்த இராணுவ, கடற்படை முகாம்களை அகற்றித் தருமாறு வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் காலை 8.30 மணியளவில் ஆரம்பித்த பேரணி பருத்தித்துறை நகர் வழியாக பிரதான வீதி ஊடாகப் பயணித்து பருத்தித்துறை பிர்தேச செயலகத்தைச் சென்றடைந்தது.

அங்கு காணி விடுவிப்பு, இராணுவ வெளியேற்றம் என்பன் உள்ளிட்ட கோஷங்களை எழுப்பிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனாதிபதிக்கான மகஜர் பருத்தித்துறை பதில் பிரதேச செயலாளர் பசுபதி தயானந்தனிடம் கையளிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தின்போது, “எமது நிலம் எமக்கு வேண்டும் இராணுவமே வெளியேறு, வெளிச்ச வீடு எங்கள் சொத்து இராணுவமே வெளியேறு, நீதிமன்றம் எங்கள் சொத்து இராணுவமே வெளியேறு, எமது வளமும் வாழ்வும் எமக்கே கொடுத்துவிடு, நகரின் இதயப் பகுதியில் ஏன் இராணுவ முகாம்?, தபால் நிலையம் எங்கள் சொத்து இராணுவமே வெளியேறு, பருத்தி நகரைப் பாதுகாப்போம், பருத்தித்துறை எங்கள் உயிர் மூச்சு, நீதிமன்றத்தை இடமாற்றாதே, வடமராட்சியின் தலைநகர் பருத்தித்துறை” உள்ளிட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களும் எழுப்பப்பட்டன.

பருத்தித்துறை நகர பிதா டக்ளஸ் போல் தலைமையில் நகர சபை உறுப்பினர்கள், கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் சுரேந்திரன் தலைமையில் பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான **தொடர்ச்சி▼**

தொடர்ச்சி▼








# இராணுவ முகாம்களை அகற்றக் கோரி பருத்தித்துறையில் மாபெரும் போராட்டம்

**தொடர்ச்சி▲**

எம்.ஏ.சுமந்திரன், செல்வராசா கஜேந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், மு.சந்திரகுமார் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சு.சுகிர்தன், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் நிரோஷ், வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன், தமிழ்த் தேசியப் பேரவை, தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகளின் பிரமுகர்கள் ஆகியோருடன் பருத்தித்துறை நகர் வர்த்தகர்கள், மரக்கறி வியாபாரிகள், கடற்றொழிலாளர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இந்தப் போராட்டத்தை முன்னிட்டு இன்று காலை பருத்தித்துறை நகரில் வர்த்தக நிலையங்கள், மரக்கறி சந்தை என்பன மூடப்பட்டு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

பருத்தித்துறை நகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியப் பேரவை, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, சுயேச்சைக் குழு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவை வழங்கியிருந்த நிலையில், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் ஆதரவை வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.














## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**யாழ். பாடசாலைகள்...**

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தேர்த் திருவிழாவை முன்னிட்டுக் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் அனைத்துக்கும் விடுமுறை வழங்கப்பட்டது.

அதற்கான பதில் கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்று வடக்கு மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார்.



# தமிழக மீனவரின் 14 படகுகளின் உரிமையாளர்கள் தனிப் படகில் இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை!

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டியபோது கைப்பற்றப்பட்டு நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்களின் 14 படகுகளின் உரிமையாளர்கள் தங்கள் படகுகளைப் பார்வையிடக் கடல் வழியாக இன்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய குற்றத்தில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட படகுகளில் நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்ட படகுகளைப் பார்வையிடவே தமிழக மீனவர்கள் வருகை தந்துள்ளனர்.

நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்ட படகு உரிமையாளர்கள் 14 பேரும் இன்று தனியான படகில் யாழ். மயிலிட்டிக்கு வருகை தந்துள்ளனர்.

இராமேஸ்வரம் பகுதியில் இருந்து வருகை தந்த விசைப்படகு உரிமையாளர்கள் தங்கள் படகுகள் திருத்தம் செய்யும் நிலையில் உள்ளதா அல்லது கட்டி இழுத்துச் செல்ல முடியுமா என்பது தொடர்பில் பரிசீலிக்கவுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள தமிழக மீனவர்கள் இன்றும் நாளையும் தங்கியிருந்து படகுகளைப் பரிசீலித்த பின்னர் மீண்டும் இராமேஸ்வரம் திரும்பவுள்ளனர்.

இவர்களின் படகுகளில் அதிகளவான படகுகள் சேதமாகியே காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

# சாவகச்சேரி நகர சபை, பிரதேச சபைகளில் சைக்கிள் கட்சியினரை வெளியேற்ற வழக்கு

சாவகச்சேரி நகர சபைக்கும், சாவகச்சேரி பிரதேச சபைக்கும் தெரிவு செய்யப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்களின் தேர்வுகளை இரத்துச் செய்து, அவர்கள் போட்டியிட்ட வட்டாரங்களில் அடுத்த நிலையில் இருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களைச் சபையின் உறுப்பினர்களாக அறிவிக்கக் கோரி தமிழரசுக் கட்சி உறுப்பினர்களினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் இன்று விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி சூசைதாசன் முன்னிலையில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுமார் ஒன்றரை மணி நேரம் வாதாடி முன்வைத்த சமர்ப்பணங்களை ஏற்றுக்கொண்டு எதிர்த் தரப்புக்கு அழைபாணை உத்தரவு பிறப்பிக்க நீதிபதி கட்டளையிட்டார்.

மேற்படி இரு உள்ளூராட்சி சபைகளிலும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பெண் உறுப்பினர்கள் அந்தந்தச் சபைகளில் போட்டியிடுவதற்கான தகமையற்றவர்கள், தகுதியீனம் உடையவர்கள் என உயர் நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பு ஒன்றை வழங்கியிருந்தது.

அந்தத் தீர்ப்பின்படி மேற்படி இரு பெண் உறுப்பினர்களும் அந்தந்தச் சபைகளின் வேட்பாளர் பட்டியலில் இடம்பெறத் தகுதியற்றவர்கள் எனக் காணப்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட இரு வேட்புமனுக்களிலும் இருக்க வேண்டிய பெண் உறுப்பினர்களின் விகிதாசாரம் குறைந்து அந்தப் பட்டியல்களே தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதியை இழந்து விட்டன எனத் தற்போது மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அது தொடர்பான விளக்கங்களை செவிமடுத்த நீதிபதி அதன் அடிப்படையில் எதிர் மனுதாரர்கள் அனைவருக்கும் நோட்டீஸ் பிறப்பிக்க உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சாவகச்சேரி பிரதேச சபைக்குப் போட்டியிட்ட தமிழரசுக் கட்சியின் 23 வேட்பாளர்களும் சாவகச்சேரி நகர சபைக்குப் போட்டியிட்ட தமிழரசுக் கட்சியின் 16 வேட்பாளர்களும் இந்த மனுக்களில் மனுதாரர்கள் ஆவர்.

இரண்டு சபைகளிலும் போட்டியிட்ட மற்றைய கட்சிகள் அனைத்தினதும் வேட்பாளர்கள் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். அதன்படி சாவகச்சேரி பிரதேச சபை தொடர்பான வழக்கில் 225 பேரும், சாவகச்சேரி நகர சபை தொடர்பான வழக்கில் 151 பேரும் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டங்களின்படி இத்தகைய வழக்குத் தாக்கல் செய்யப்பட்டால், அந்த வழக்கு முதல் தடவை நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்குள் வழக்கு விசாரித்து முடிவுறுத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் இந்த இரு வழக்குகளும் காலம் இழுபடாமல் விரைவில் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கலாம்.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகளான கேசவன் சயந்தன், பெனிஸலஸ் துஷான் ஆகியோரும் மன்றில் ஆஜராகினர்.




# காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரி வடக்குக் கிழக்கில் மாபெரும் போராட்டம்!

## அனைத்துத் தரப்பிடமும் ஆதரவு கோருகிறது ஏற்பாட்டுக் குழு

(எஸ்.நிதர்ஷன்)

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரி எதிர் வரும் 30 ஆம் திகதி வடக்குக் கிழக்கில் மாபெரும் போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்படுள்ளது என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கம், அதனை வலுப்படுத்த பேதங்களற்ற வகையில் அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து யாழ். ஊடக அமையத்தில் இன்று (25) ஊடக சந்திப்பு ஒன்றை ஏற்பாடுக்குழு நடத்தியது.

இந்த சந்திப்பில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

அண்மையில் ஐ. நா. பிரதிநிதி யாழ். வந்து செம்மணியின் தடயங்களை பார்வையிட்டார். அவரது இந்த செயற்பாட்டை அடுத்து நீதிக்கான சமிக்ஞை கிடைக்கும் என்று நம்பினோம். ஆனால் அத்தனையும் கலைந்துவிட்டது.

ஐ.நாவின் பிரதிநிதி உள்ளக பொறிமுறையை எம்மிடம் திணித்துச் சென்றது போன்று அவரது கருத்து இருக்கின்றது.

நாம் சர்வதேச விசாரணையையே கோருகின்றோம். அதற்கான வலியுறுத்தலையே இன்றும் வலியுறுத்துகின்றோம்.

எனவே எமக்கு உள்ளக பொறிமுறை வேண்டாம். அதில் எமக்கு நம்பிக்கை இல்லை.

இந்த நிலையில் எதிர்வரும் 30 ஆம் திகதி செம்மணியில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

இந்தப் போராட்டத்துக்கு மதத் தலைவர்கள், பல்கலைச் சமூகம், பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புகள், அரசியல் கட்சிகள் என அனைவரும் பேதங்களற்ற வகையில் ஒன்று திரண்டு போராட்டத்தை வலுப்படுத்த வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இல்லற வாழ்வில் இணைய முடியாதிருக்கும் 108 சோடிகளுக்கு ஒரே மேடையில் திருமணம்!

## வியாழனன்று செல்வச் சந்நிதியான் ஆலயத்தில்



யாழ். மாவட்டத்தில் திருமண வயதை எட்டியும் பொருளாதார நிலை காரணமாக இல்லற வாழ்வில் இணைய முடியாதிருக்கும் 108 சோடிகளுக்கு திருமணம் செய்துவைக்கப்படவுள்ளது.

சிங்கப்பூர் வாழ் தமிழ் உணர்வாளரது நிதிப் பங்களிப்பில் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண வர்த்தக சங்கத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான இ.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து இன்று ஊடக சந்திப்பு ஒன்றை அவர் முன்னெடுத்துள்ளார்.

இந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறுகையில்,

சிங்கப்பூரை வதிவிடமாக கொண்ட ரி.ரி. துரை சுமதினியின் பங்களிப்பிலேயே குறித்த 108 தம்பதியினருக்கு திருமணம் செய்துவைக்கப்படவுள்ளது.

குறிப்பாகத் தாலி, சீதனம் உள்ளிட்ட அனைத்தும் குறித்த தம்பதியினருக்கு வழங்கப்பட்டு தொண்டமனாறு செல்வச் சந்நிதியான் ஆலயத்தில் இந்தத் திருமணங்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை இந்த 108 தம்பதியினருக்கும் திருமணம் செய்து வைக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.- என்றார்.

# தபால் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நிறைவு

தபால் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வந்த பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நேற்று மாலையுடன் நிறைவுக்கு வந்தது.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுடனான கலந்துரையாடலில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைவாக கடந்த 7 நாட்களாக முன்னெடுத்து வந்த பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நிறைவுக்கு வந்தது என்று தபால் தொழிற்சங்க முன்னணியின் இணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

19 கோரிக்கைகளை முன்வைத்து தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கங்கள் உட்பட பல தொழிற்சங்கங்கள் கடந்த 17ஆம் திகதி முதல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டன.

இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தால் நாடு முழுவதும் உள்ள தபால் நிலையங்களின் சேவைகள் பாதிக்கப்பட்டன. இதனால், இலட்சக்கணக்கான கடிதங்கள் தேங்கியுள்ளன என்றும் தெரியவருகின்றது.

# புதிய அலை கலை வட்டத்தின் 3ஆவது ஹைக்கூ கவியரங்கம்

புதிய அலை கலை வட்டத்தின் இளைஞர் அணி மாதாந்தம் நடத்தும் ஹைக்கூ கவியரங்கம் எதிர்வரும் 31ஆம் திகதி மாலை 3.30 மணிக்குக் கொழும்பு - 13, புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள எக்ஸலன்ஸ் சர்வதேச பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கவியரங்குக்குத் தலைமையை ஏற்கின்றார் உளவியல் மற்றும் உளவளத் துணை விஞ்ஞான மாணிப் பட்டப்படிப்பு மாணவியும் புதிய அலை கலை வட்டத்தின் மகளிர் அணியின் செயலாளருமான திருமதி பிரியதர்ஷினி விக்கினேஸ்வரன்.

திறந்த நிகழ்வாக நடைபெறவுள்ள இந்த அமர்வில் கலந்துகொண்டு தமது கவித் திறமைகளை வெளிக்கொணர விரும்புவோர் அன்றைய தினம் நேரில் கலந்துகொள்ள முடியும்.

மேலதிக விவரங்களைப் பெற 075 4880172 என்ற அலைபேசி மற்றும் வட்சப் உடன் தொடர்பு கொள்ளலாம்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# ஏன் தமிழர்கள் இல்லை?

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் அடைக்கப்பட்டமை தொடர்பில் எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து கெம்பி எழுந்திருக்கின்றன.

எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஒரே அணியில் பட்டாளமாக நேற்று ஒன்று சேர்ந்து நீண்ட மரதன் செய்தியாளர் சந்திப்பை கொழும்பில் நடத்தி இருக்கிறார்கள்.

நாட்டில் 'அரசமைப்பு ரீதியான சர்வாதிகாரம்' கட்டவிழ்வதாகத் தெரிவித்து, அதற்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒரே மேடையில் ஒன்றிணைந்து எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடியிருக்கிறார்கள்.

அரசமைப்பு சர்வாதிகாரத்தைத் தோற்கடிப்போம் என்று முழங்கிக் கூட்டப்பட்ட இந்தச் செய்தியாளர் மாநாட்டில் தமிழ் பேசும் சிறுபான்மை இனத்தவர்கள் சார்பில் மனோ கணேசனும், ஹக்கீம் போன்றவர்களும் மாத்திரம் பங்குபற்றியிருக்கின்றார்கள். வடக்கு - கிழக்கு தமிழ்த் தரப்புக்களைச் சேர்ந்த தலைவர்கள் எவரையும் காண முடியவில்லை. எந்தத் தமிழ் கட்சியும் அங்கு தலை காட்டவில்லை.

அதன் அர்த்தம் எதிர்க்கட்சிகள் கூறுவது போன்ற அரசமைப்பு சர்வாதிகாரம் நாட்டில் கட்டவிழவில்லை என்று ஈழத் தமிழர் தரப்பு கருதுகின்றது என்பது அல்ல. அல்லது அப்படிக் கட்டவிழும் சர்வாதிகாரத்தை எதிர்க்க வேண்டிய தேவை இல்லை என்று தமிழர்கள் கருதுகிறார்கள் என அர்த்தம் கொள்ளவும் தேவையில்லை.

தேசிய ரீதியில் எதிரணிகள் ஒன்று சேரும் இத்தகைய கொள்கை ரீதியான ஒன்று கூடலில்தன்னும் தமிழர்கள் சேரத் தயாரில்லை என்றால் அதன் அர்த்தத்தை இந்தத் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் - குறிப்பாக எதிரணியில் இருக்கும் தலைவர்கள் - கவனத்தில் கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் தலைவர்களுக்கு எதிராக கட்டவிழும் இதே எதேச்சாதிகாரம், இதே அரசமைப்பின் கீழ் ஈழத் தமிழர்கள் மீது நான்கு தசாப்தங்களாகக் கொடூரமாக - மிகக் குரூரமாக - மிலேச்சத்தனமாக - கட்டவிழ்ந்த போதும் நீங்கள் எல்லோரும் பார்த்துக் கை கொட்டி சிரித்திருந்தீர்கள். நந்திக் கடல் வரை பயணித்த தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் போது இதிலும் விட மிக மூர்க்கமாக - இதிலும் விடக் கொடூரமாக - இதை விடப் பயங்கரமாக - எதேச்சாதிகாரம் அப்பாவித் தமிழ் மக்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டது. அப்போது அந்த நடவடிக்கையை ஊக்குவித்தவர்களும், அதைப் பாராட்டியவர்களும் இன்று எதிரணியில் வந்திருந்து ஒன்று கூடி 'அரசமைப்பு சர்வாதிகாரம்' பற்றி பிரலாபிக்கின்றீர்கள். அதற்கு தமிழர்கள் சேர்ந்து ஒத்துழைத்தால் இதற்கு முன்னர் தமிழர்கள் மீது இழைக்கப்பட்ட இதே எதேச்சாதிகாரத்தை தமிழ் மக்கள் அங்கீகரிக்கிறார்கள் என்று அர்த்தப்பட்டுவிடும்.

அதேசமயம், நேற்றைய எதிரணியின் கூட்டு செயற்பாட்டில் தமிழர்கள் பங்குபற்றாத காரணத்தினால் அவர்கள் அத்தகைய எதேச்சாதிகாரத்தை - அரசமைப்பு ரீதியான சர்வாதிகாரத்தை - ஏற்றுக் கொள்கிறார்கள் என்றும் அர்த்தமல்ல என்பதை ஆளும் தரப்பும் புரிந்து கொள்ள வேண்டும்.

குற்றங்கள் மீதான தண்டனை வெறுமனே லஞ்சம், முறைகேடு, ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம், மோசமான ஆட்சி நிர்வாக முறை ஆகியவை பற்றியனவாக மட்டும் இருக்க முடியாது. யுத்தத்தின் பெயரால் அப்பாவித் தமிழ் மக்களை வேண்டும் என்றே திட்டமிட்டுக் கொன்றொழித்த யுத்தக் குற்றங்கங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், உரிமை மீறல்கள் ஆகியவை குறித்தும் நீதி - நேர்மையான - உண்மையான - சர்வதேச நியமங்களுக்கு அமைவான - விசாரணை நடத்தும் எண்ணைப் போக்கிலும் அமைய வேண்டும்.

அத்தகைய நேர்மைத்தனம்தான் உண்மை நீதி. அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காக அரசியலில் எதிர்த் தரப்பு மீது பழிவாங்கும் எண்ணத்தில் நடத்தப்படும் நீதி விசாரணைகள் நீதி நேர்மையானவையோ உண்மையானவையோ அல்ல.




# உப தவிசாளரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது சாவகச்சேரி பஸ் நிலைய வீதி திருத்தப் பணி!

சாவகச்சேரி நகர சபையின் பஸ் நிலைய வீதி மற்றும் நடைபாதை என்பவற்றின் புனரமைப்பு பணிகள் உப தவிசாளர் ஞா.கிஷோரால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

உப தவிசாளரின் நகரை அழகுபடுத்தும் திட்டத்துக்கு அமைய பஸ் நிலைய வீதி மற்றும் வீதியோடு இணைந்த நடைபாதை என்பன புனரமைக்கப்படவுள்ளன.

இன்று (25) இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் நகர சபை உப தவிசாளர் ஞா.கிஷோர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், நகர ஓட்டோ சங்கத்தினர், தனியார் பஸ் சங்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# டன்சினான் மத்திய பிரிவு நெடுங்குடியிருப்பில் தீ!

## 10 வீடுகள் எரிந்து நாசம்



(மஸ்கெலியா )

பூண்டுலோயா, டன்சினன் மத்திய பிரிவில் நெடுங்குடியிருப்பில் இன்று (25) முற்பகல் 11 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 லயன் அறைகள் எரிந்து நாசமாகியுள்ளன. அத்துடன், சொத்துகளும் சேதமடைந்துள்ளன.

நெடுங்குடியிருப்பில் இருந்தவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

தோட்ட இளைஞர்கள், மக்களின் ஒத்துழைப்புடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குளவி கொட்டுக்கு ஆளான மூவர் வைத்தியசாலையில் அனுமதி!

## வைத்தியர்கள் உடனடியாகச் சிகிச்சையளிக்காததால் அவதி

(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இரணைப்பாலை பகுதியில் குளவி கொட்டுக்கு இலக்காகிய மூவர் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில் நீண்டநேரமாக சிகிச்சை வழங்கப்படாமையால் நோயாளர்கள் பெரும் அவதி அடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வந்துள்ளதாவது,

இன்று (25) காலை 6.30 மணியளவில் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த வயோதிபர்கள் இருவருக்கும், அவ் வீதியால் சென்று கொண்டிருந்த பெண் ஒருவருக்கும் அப்பகுதியில் இருந்த குளவிகூடு ஒன்று கலைந்து அதிலிருந்த குளவிகள் கொட்டியுள்ளன.




உடனடியாக உறவினர்களால் மூவரும் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் வைத்தியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் இருக்கின்றனர் என்று கூறி நீண்டநேரம் அவர்கள் பார்வையிடப்படவில்லை என்று நோயாளர்கள் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்காகிய மூவர், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சிக்கிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு நீண்ட நேர காத்திருப்பின் பின்னர் தற்போது அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியர்கள் அல்லது தாதியர்கள் பணிப் பகிஷ்கரிப்பாக இருப்பினும் அவசர சிகிச்சைக்கு வரும் நோயாளர்களையாவது உடனடியாக மருத்துவமனைக்குள் அனுமதித்து சிகிச்சையளிக்க வேண்டும் என நோயாளர்கள் இதன்போது தெரிவித்திருந்தனர்.

அத்தோடு இன்னும் பல நோயாளர்கள் நீண்ட வரிசையில் பல மணி நேரம் காத்திருந்த பின்னரே சிகிச்சை பெற்றுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# முந்திரிகை நடுகை தொடர்பான பயிற்சிநெறி பச்சிலைப்பள்ளியில்

இலங்கை மர முந்திரிகை கூட்டு தாபனத்தினரால் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மர முந்திரிகை செய்கையாளர்களுக்கான முந்திரிகை நடுகை தொடர்பான பயிற்சி நெறி பிரதேச செயலக சிறிய மாநாட்டு மண்டபத்தில் நிர்வாக உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்றது.

வளவாளராக வடக்கு மாகாண மர முந்திரிகை கூட்டுத் தாபன முகாமையாளர் லோ.சஞ்சீவன் கலந்து கொண்டார்.







# சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலுப்படுத்த தாவரம் நடும் செயற்றிட்டக் கலந்தாய்வு

சுற்றுச்சூழல் மற்றும் மனித பாதுகாப்பை வலுப்படுத்தல் மற்றும் மீட்டமைத்தல் எனும் தொனிப் பொருளில் முகமாலை கிராம அலுவலர் பிரிவில் கண்டல் தாவரம், பனை மற்றும் தென்னை ஆகிய தாவரங்களை நடும் செயற்றிட்டத்தை எச். டி. ஓ. நிறுவனம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக அதனுடன் தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் அமைப்புகளுக்குத் தெளிவூட்டும் அறிமுகக் கலந்துரையாடல் அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் இ. த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.



# உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்த்தல் தாய்லாந்தின் அனுபவம் முன்மாதிரி!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் மெச்சுகின்றார்

உற்பத்திப் பொருள்களைப் பெறுமதி சேர் உற்பத்திப் பொருள்களாக மாற்றுவதில் சிறப்பாகச் செயற்படும் தாய்லாந்து, அது தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதுடன், முதலீட்டாளர்களை இங்கு முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்கவேண்டும்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், இலங்கைக்கான தாய்லாந்து தூதர் பெய்ரூன் தலைமையிலான குழுவினர், ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

தூதுக்குழுவினரை வரவேற்ற ஆளுநர், பொருள்களை பெறுமதிசேர் உற்பத் திப் பொருட்களாக மாற்றுவதில் தாய்லாந்து முன்னணியில் உள்ள மையை சுட்டிக்காட்டினார். மிக நீண்ட கால அனுபவம் உள்ள தாய்லாந்து இது தொடர்பில் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வடக்கு மாகாணம் விவசாய மற்றும் கடலுணவு உற்பத்திகளில் போதிய திறனைக் கொண்டுள்ள போதும் இரு துறைகளில் விலைத்தளம்பல் இருக்கின்றது. இதனால் விவசாயிகள் விவசா



யத்தை கைவிடும் நிலைமையும் இருக்கின்றது என்று ஆளுநர் இதன்போது தெரிவித்தார். இதை மாற்றியமைப்பதற்கு உற்பத்திப் பொருள்கள் அதிகளவில் கிடைக்கப்பெறும்போது அதைப் பதப்படுத்துவதற்கோ அல்லது பெறுமதி சேர் உற்பத்திப் பொருள்களாக மாற்றுவதற்கோ உரிய வாய்ப்புக்கள் இல்லை என்பதை ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயத்தில் அனுபவமுள்ள தாய்லாந்து முதலீட்டாளர்கள் இங்கு முதலீடு செய்வதன் ஊடாக பெறுமதி சேர் உற்பத்திப் பொருள்களாக மாற்றி ஏற்றுமதி செய்ய முடியும் என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்த விடயத்தைச் சாதகமாக அணுகுவதாக தூதர் பதிலளித்தார். அத்துடன் வேலை வாய்ப்பு தொடர்பான விடயத்தில், தாய்லாந்தில் பல இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது என்பதையும் குறிப்பிட்ட தூதர்? வடக்கு மாகாண இளையோரும் அந்த வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

மேலும், சுற்றுலாத்துறை தொடர்பிலும் தாய்லாந்து தூதர் கவனம் செலுத்தினார். அதற்கான உட்கட்டுமானங்கள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.

வடக்கு மாகாணத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் முல்லைத்தீவு மாவட்டம் உள்ளமையைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், கடந்த கால போர் காரணமாக அந்த மாவட்டம் மேலெழுந்து வருவதில் இடர்பாடுகளை எதிர்கொள்கிறது என்றும் குறிப்பிட்டார். போதுமான வளங்கள் அந்த மாவட்டத்தில் உள்ளபோதும் அதைப் பயன்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளமையையும் தெளிவுபடுத்தினார்.

இந்தச் சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் மற்றும் ஆளுநரின் இணைப்புச் செயலாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



# கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தில் பிரதான நுழைவாயில் திறப்பு விழா!

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தில் பிரதான நுழைவாயில் திறப்பு விழாவும் மற்றும் இந்த ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவும் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் சோ. இளங்கோபன் தலைமையில் பத்மநாதன் மகேஸ்வரி அறக்கட்டளையின் பூரண அனுசரணையுடன் பத்மநாதன் மகேஸ்வரி அறக்கட்டளையின் ஸ்தாபகர் பத்மநாதன் நடேசன் விசேட அதிதியாகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளர் மகேந்திரகுமார் மற்றும் சம்மாந்துறை வலய கல்வி பணிமனையின் பிரதிக் கல்வி பணிப்பாளர்கள் மற்றும் பத்ம நாதன் மகேஸ்வரி அறக்கட்டளையின் அங்கத்தவர்கள், ஆலய அறங்காவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் 2024 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாண பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன.

பாடசாலை நிர்வாகம், விளையாட்டுக் கழகங்கள், சமூக அமைப்புகள் மூலம் ப.நடேசனுக்கு மகத்தான கௌரவம் வழங்கப்பட்டது.



# கணிதபாட ஆசிரியர் இன்மையால் நெருக்கடி நிலையில் மாணவர்கள்!

கணிதபாட ஆசிரியர் இன்மையால் பாடசாலை தவணை ஆரம்பித்து ஒருவாரமாகியும் பரீட்சையின் மாணவர் தேர்ச்சி அறிக்கை வழங்கப்படவில்லை என்று பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

கணித பாடத்தில் ஆசிரியர் இன்மையால் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் கணித பாடத்தில் பெரும் நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி கல்வி வலயத்தின் வினாத்தாள்களுக்கு மாணவர்கள் தோற்றிய போதிலும் கணித பாடத்துக்கு உரிய விடைத்தாள்கள் இன்னமும் திருத்தப்படவில்லை. இதனால் கணித பாடத்துக்கு உரிய மதிப்பெண் இன்மையால் தேர்ச்சி அறிக்கை வழங்கப்படவில்லை.

இவ்வாறான நிலை பளை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த இத்தாவில் வேம்பொடுகேணி சீ. சீ. த. க . பாடசாலை மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த வருடம் பாடசாலையில் விஞ்ஞான பாட ஆசிரியர் இன்மையால் பரீட்சைக்குத் தோற்றமுடியாத நிலை காணப்பட்டது.

விஞ்ஞான பாடத்துக்குத் தோற்ற முடியாத மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்து கலைப் பிரிவில் உயர்தர வகுப்பில் கற்பதாகவும் கணித பாடம் இல்லாமல் உயர்தர வகுப்பு கற்க முடியாத நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது பாடசாலையில் கணித பாடத்துக்கு இரு ஆசிரியர்கள் உள்ளபோதிலும் ஒருவர் பிரசவ விடுமுறையிலும் மற்றும் சுகயீன விடுமுறையில் உள்ளனர் என்று தெரிவித்தனர்.

# இத்தாவில் சந்தியில் விபத்து ஆசிரியை ஒருவர் படுகாயம்!

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியின் மறுகரைக்கு திரும்பிய மற்றுமொரு மோட்டார் சைக்கிளை மோதியதில் அதில் பயணித்த 50 வயது ஆசிரியை காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் இன்று (25) காலை பளை இத்தாவில் சந்தியில் இடம்பெற்றது.

புலோப்பழை கிழக்கைச் சேர்ந்த அருள்நேசராசா பிரின்லஸ் (வயது 50) என்பவர் பளை வேம்பொடுகேணி சீ. சீ.த.க. பாடசாலை ஆசிரியையாகக் கடமையாற்றுகின்றார்.

இன்று திங்கட்கிழமை காலை கடமைக்காக ஏ - 9 வீதியில் வந்து பாடசாலைக்கு செல்வதற் காக வீதியின் மறுகரைக்கு திரும்பிய வேளையில் அதே மார்க்கத்தில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் ஆசி ரியை காயமடைந்தார்.

காயமடைந்த ஆசிரியை பளை மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார். முகம் மற்றும் பல், பெருவிரல் ஆகியவற்றில் பலத்த காயம் ஏற்பட்டதால் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.








## மாணாக்கர் உழவர் வீட்டுத்தோட்டப் போட்டி

# விதைப் பொதி விநியோகமும் செயன்முறை வழிகாட்டலும்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் மாணவர்களிடையே நடத்தி வரும் மாணாக்கர் உழவர் வீட்டுத்தோட்டப் போட்டி இந்த ஆண்டும் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்பதற்காக முன்பதிவு செய்திருந்த மாணவர்களில் இருந்து முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 150 மாணவர்களுக்கு உரிய விதைப் பொதிகள் விநியோகமும் செயன்முறை வழிகாட்டல் கருத்தமர்வும் நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது.



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கிருபவதனி சிவதீபன், இயற்கை விவசாயச் செயற்பாட்டாளர் காரை சி. நிரோசன், சூழகம் அமைப்பின் செயலாளர் க.நாவலன், கல்வி மேம்பாட்டுச் செயற்பாட்டாளர் சி. கணபதிப்பிள்ளை, கணா பசுமை இயக்கத்தின் சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த.யுகேஸ் ஆகியோர் வழிகாட்டல்கருத்துரைகளைவழங்கியிருந்தனர்.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பற்றாக்குறை, மாணவர்களில் காணப்படும் போசாக்குப் பற்றாக்குறைவு, நஞ்சற்ற உணவு உற்பத்தி, மாணவர்களை மன அழுத்தங்களில் இருந்து விடுவித்தல் ஆகியவனவற்றை நோக்காகக் கொண்டு மாணாக்க உழவர் என்னும் இந்தத் திட்டத்தைக் கடந்த சில வருடங்களாக முன்னெடுத்து வருகின்றது.

ஏராளமான மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றுவரும் இந்தப் போட்டியில் பங்கேற்கும் அனைவருக்கும் மாணாக்க உழவர் சான்றிதழ் வழங்கப்படுவதோடு , சிறப்பாக வீட்டுத் தோட்டச் செய்கையை மேற்கொள்பவர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.






# முதியோர் கொடுப்பனவு விநியோகம் ஆரம்பம்

தென்மராட்சி பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் இன்று (25) தொடக்கம் ஓகஸ்ட் மாதத்துக்கு உரிய முதியோர் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கொடுப்பனவுகளுக்கான பட்டியல் பிரதேச செயலகத்ததுக்கு வந்தபோதும் அஞ்சல் அலுவலக பணியாளர்களின் பணிப் புறக்கணிப்புக் காரணமாக அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பப்படவில்லை.

அஞ்சல் பணியாளர்கள் கடமைக்கு திரும்பியதைஅடுத்துகொடுப்பனவுக்கான பட்டியல் இன்று திங்கட்கிழமை அஞ்சல் அலுவலகங்களில் கையளிக்கப்பட்டன.

இதனையடுத்து கொடுப்பனவு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# குற்றச்சாட்டில் சிக்கிய பிரதி பொலிஸ்மா அதிபர்: குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது



கொழும்பு பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் உதித்த லியனகே இன்று திங்கட்கிழமை குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதையல் தோண்டுவதற்கு முற்பட்ட குற்றச்சாட்டில் குறித்த பொலிஸ் மா அதிபரின் மனைவி உட்பட 8 பேரை அநுராதபுரம் பொலிஸார் முன்னதாக கைது செய்திருந்தனர். இத னையடுத்து தாம் பிரதி பொலிஸ் மா அதிபர் என்றும், தமது மனைவியை உடனடியாக விடுவிக்குமாறும் அநுராதபுரம் பொலிஸாருக்கு சந்தேநபர் தொலைபேசியில் அழுத்தம் கொடுத்ததாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், இன்றைய தினம் சந்தேகநபரை கைது செய்ததாக தெரிவிக்கப்படுகின்றது.



# மிருசுவில் உசனில் நிர்மாணிக்கப்பட்ட ‘குமாரபதி’ மனைத் தொகுதி திறப்பு!

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தினர் மிருசுவில் உசன் கிராமத்தில் நிர்மாணித்த ‘குமாரபதி’ மனைத் தொகுதித் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் எஸ். வை. சுதாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிர தீபனும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியன் ரகுரா மும், கௌரவ விருந்தினர்களாக கிராம அலுவலர்கள் அழகராஜா பிரதீபன், திருமதி சியோசினி செந்தூரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நன்கொடையாளர்கள் உதவி மூலம் ஐந்து குடியிருப்பு கள் நிர்மாணிக்கப்பட்டு, பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.



# தி.மு.கவில் தீவிரமடையும் உட்கட்சியில் பிரச்சினைகள்

‘உடன்பிறப்பே வா’ சந்திப்பு நிகழ்வின்போது தலைமையிடம் நேரடியாக தெரிவிக்கப்படும் உட்கட்சி பிரச்சினைகள் மீது முறையான நடவடிக்கை எடுக்கப்படாததால் தி.மு.க. நிர்வாகிகள் அதிருப்தியில் இருகின்றனர் என கூறப்படுகிறது.

தமிழகத்தில் சட்டப்பேரவை பொதுத்தேர்தல் அடுத்தாண்டு நடைபெற உள்ளது. இதற்காக அனைத்து கட்சிகளும் தேர்தல் பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றன.

இதில் ஆளும் தி.மு.க சார்பில் கடந்தாண்டே துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு மற்றும் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் அடங்கிய குழு அமைக்கப்பட்டது.

இந்தக் குழு மாவட்ட வாரியாகவும், அணிகள் வாரியாகவும் நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை நடத்தியது. அதன்பின் நிர்வாகிகள் நியமனம், மாவட்ட செயலாளர் எண்ணிக்கை அதிகரிப்பு உட்பட பல்வேறு பரிந்துரைகளை அக்குழு அளித்தது.

அதன்படி கட்சியில் சில மாற்றங்களை தி.மு.க. செய்து வருகிறது. மாநிலத்தை 8 மண்டலங்களாக பிரித்து ‘உடன்பிறப்பே வா’ எனும் பெயரில் தொகுதிவாரியாக நிர்வாகிகள் சந்திப்பு நடைபெற்று வருகிறது. அதன்படி இதுவரை 40 இற்கும் மேற்பட்ட தொகுதிகளின் நிர்வாகிகளுடன் தி.மு.க. தலைவரும், முதல் வருமான ஸ்டாலின் ஆலோசனை நடத்தியுள்ளார்.

அதில், தொகுதி நிலவரம், உட்கட்சி பூசல்கள், தேர்தல் பொறுப்பாளர்கள் ஆதிக்கம், இளைஞரணியின் இடையூறுகள், நகராட்சி கவுன்சிலர்கள் தன்னிச்சை செயல்பாடுகள் என பல்வேறு தரப்பட்ட புகார்களை தலைமைக்கு கொட்டித் தீர்த்துள்ளனர். அதன்பின்னும் நடவடிக்கையும் எடுக்கப்படாததால் நிர்வாகிகள் அதிருப்தியில் இருக்கின்றனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.



இதுகுறித்து தி.மு.க. வட்டாரங்கள் குறிப்பிடுகையில்,

“தி.மு.கவில் நிர்வாக அமைப்புரீதியாக 76 மாவட்டச் செயலாளர்கள் இருக்கின்றனர். இதுதவிர ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பொறுப்பு அமைச்சர்கள், 234 தொகுதிகளுக்கு பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர். தொடர்ந்து மாநிலத்தை 8 மண்டலங்களாக பிரித்து அதற்கும் ஆ.ராசா, எவ.வேலு, கனிமொழி உள்ளிட்ட பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

தி.மு.கவை பொறுத்தவரை மாவட்டச் செயலாளர்தான் தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதியில் கட்சிப் பணிகள், தேர்தல் செயல் பாடுகளை கவனிப்பர். ஆனால், தற்போது மாவட்டச் செயலாளர், பொறுப்பு அமைச்சர், தொகுதி பொறுப்பாளர், மண்டலப் பொறுப்பாளர் என 4 தலைமைகள் இருப்பதால் நிர்வாகிகளிடம் இணக்கமான சூழல் இருப்பதில்லை. தனித்தனி அணிகளாக செயல்பட வேண்டிய கட்டாயமுள்ளது. இதுதவிர இளைஞரணிக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைவராக இருப்பதால் அவரின் ஆதரவாளர்கள் தனி ஆவர்த்தனம் செய்து வருகின்றனர்.

இதனால் மற்ற நிர்வாகிகள், தொண்டர்கள் யாரை பின்பற்றி செல்வது என்ற தயக்கம் நிலவுகிறது. உடன்பிறப்பே வா சந்திப்பில் பங்கேற்கும் நிர்வாகிகளை மாவட்டச் செயலாளர் தான் முடிவு செய்கிறார். இதற்கு முன்பு கட்சி தொடர்பான பிரச்சினைகளை அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இணைச் செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் கவனித்து வந்தனர்.

இவர்கள் மாவட்ட, மண்டல அளவிலானமுக்கியபொறுப்பாளர்களுடன் இணக்கமாக உள்ளனர். மேலும், தலைவரை தனியாக சந்தித்து பேச 2 நிமிடங்கள்தான் தரப்படுகிறது. எனவே, இந்த சந்திப்பின்போது கள நிலவரங்களை குறைகளை சுட்டிக் காட்ட முடிவதில்லை. இதனால் இந்த சந்திப்புக்கான நோக்கமே அர்த்தமற்றதாகி விடுகிறது. அதேபோல், தலைமைக்கு கட்டுப்படாமல் பல்வேறு நகராட்சி கவுன்சிலர்கள் தன்னிச்சையாக செயல்படுகின்றனர்.

இதனால் நம்பிக்கை இல்லா தீர்மானங்கள் அதிகளவில் வருகின்றன. இவை வேட்பாளர் தேர்வு, பூத் கொமிட்டி அமைத்தல் போன்ற தேர்தல் பணிகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். வேட்பாளராக தகுதியான ஒருவரை மாவட்டச் செயலாளர் பரிந்துரை செய்தால், மற்ற தரப்பினர் அவர் குறித்த தவறான தகவல்களை தலைமைக்கு புகாராக தெரிவிக்கின்றனர்.

இதை உடன்பிறப்பே வா நிகழ்வின் போது தலைமையிடம் கூடுமானவரை பதிவு செய்துவிட்டோம். ஆனால், பெரும்பாலான விவகாரங்களில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பல்வேறு நலத்திட்டங்களால் தி.மு.க. ஆட்சிக்கு மக்களிடம் நல்லப் பெயர் இருந்தாலும் இத்தகைய பிரச்சினைகள் தேர்தலில் நமது வெற்றியை பரிசோதிக்கும்.” என்று தெரிவித்துள்ளன.

# கட்சியை தொடங்கிவிட்டோம் என்பதற்காக விஜய் கடந்த காலத்தை மறந்து பேசக்கூடாது

## அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவிப்பு



அரசியல் கட்சி தொடங்கிவிட்டோம் என்பதற்காக விஜய் கடந்த காலத்தை மறந்துவிட்டு முதல்வரை மரியாதை குறைவாக பேசுவது சரியல்ல என பாடசாலை கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் கூறினார்.

இதுகுறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் கருத்து தெரிவிக்கையில்,

“அறிவுசார்ந்துதான் தமிழ் மொழியை தி.மு.க. உயர்த்தி பிடிக்க நினைக்கிறது. ஆனால், பா.ஜ.க. போன்ற அரசியல் கட்சிகள் தமிழ் 2,000 ஆண்டுகள் பழமையானது. சமஸ்கிருதம் போன்ற மொழிகள் பல்லாயிரம் ஆண்டுகள் பழமையானவை எனக்கூறி நமது வரலாற்றை மறைக்கப் பார்க்கிறார்கள்.

தமிழினம் 5,300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பை பயன்படுத்தியுள்ளது. ஆனால் அதை மூடி மறைக்கும் வேலையை மத்திய அரசு செய்து வருகிறது. ஆனால், தமிழின் பெருமையை உலக அளவில் எடுத்து செல்வதற்கான முயற்சியில் திமுக இறங்கியுள்ளது. அந்த வகையில் அடுத்து ஆண்டு ஜனவரி மாதம் பன்னாட்டு புத்தக கண்காட்சிக்கு 100 நாடுகளில் இருந்து புத்தகம் மற்றும் தமிழ்மொழி மீது ஆர்வமுள்ளவர்களை வரவழைக்க திட்டமிட்டுள்ளோம்.

முதல்வர் ஸ்டாலினை நடிகர் விஜய் மரியாதை இல்லாமல் பேசியது தவறு. கருணாநிதியின் குடும்பத்துடன் விஜய் குடும்பம் நெருக்கமான உறவு கொண்டவர்கள். உதயநிதியின் நல்ல நண்பனாக இருந்தவர். ஆனால், தற்போது ஒரு அரசியல் கட்சி தொடங்கிவிட்டோம் என்பதற்காக அனைத்தையும் மறந்துவிட்டு பேசுவது சரியல்ல. அதேபோல், தி.மு.கவை வேரோடு பிடுங்கி எறிய வேண்டுமென மத்திய அமைச்சர் அமித் ஷா கருத்து கூறியுள்ளார்.

அமித் ஷாவுக்கு தமிழகத்தின் அரசியல் பற்றி தெரியவில்லை. 75 ஆண்டுகள் பழமையான கட்சி தி.மு.க. 4 தலைமுறைகளையும் சேர்ந்த தொண்டர்கள் தி.மு.கவில் உள்ளனர். அவர்களுக்கு இருக்கும் அரசியல் சிந்தனை தெளிவானவை. மேலும் தி.மு.க. கல்வி, சமூகநீதியுடன் சேர்ந்து வளர்ந்த அரசியல்கட்சி. அவ்வளவு எளிதில் அசைக்க முடியாது.” என்று தெரிவித்துள்ளார்.





# காசா மீது இஸ்ரேலின் விமானங்கள் தாக்குதல்

இஸ்ரேலின் வான்படை விமானங்களும், தாங்கிகளும் காசா நகரத்தின் சில பகுதிகளைத் தாக்கியுள்ளன.

காசாவின் மிகப்பெரிய நகர்ப்புறப் பகுதியைக் கைப்பற்றும் இஸ்ரேலின் திட்டங்களுக்கு மத்தியிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் அங்கு வசிக்கும் கிட்டத்தட்ட பத்து லட்சம் பாலஸ்தீனியர்கள் மீது பாரிய அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

நகரத்தின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் தடையற்ற வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்தநிலையில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலிய தாக்குதல்களில் 64 பேர் கொல்லப்பட்டனர்.

சுமார் 300 பேர் காயமடைந்தனர் என்று ஹமாஸின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஹமாஸை தோற்கடிக்க இஸ்ரேல் தமது பாரிய தாக்குதலை ஆரம்பித்தது முதல் இதுவரை கொல்லப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 62,686 ஆக உயர்ந்துள்ளது. 157,951 பேர் காயமடைந்தனர்.





# உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி விரைவில் இந்தியா செல்கின்றார்

## உக்ரைன் தூதர் தகவல்



உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி விரைவில் இந்தியா வர உள்ளார் என இந்தியாவுக்கான உக்ரைன் தூதர் போலிஷ்சுக் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் - ரஷ்யா போர் கடந்த 3 ஆண்டுகளாக நீடித்து வரும் நிலையில் குழந்தைகள் பெண்கள் அதிகளவில் உயிரிழந்து வருகின்றனர். இரு நாடுகளுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொள்ள அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தீவிர முனைப்பு காட்டி வருகிறார். கடந்த சில தினங்களுக்கு முன்னர், பிரதமர் மோடியுடன், ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புடின் தொலைபேசி மூலம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதில், உக்ரைன் போர் குறித்து ரஷ்ய ஜனாதிபதியிடம் பிரதமர் மோடி கூறும்போது,

மோதல்களுக்கு தூதரக ரீதியில் பேச்சுவார்த்தை மூலம் அமைதி வழியில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் உறுதியான நிலைப்பாடாக உள்ளது என தெரிவித்தார்.

இந்த நிலையில், இந்தியாவுக்கான உக்ரைன் தூதர் போலிஷ்சுக் கூறும் பொது,

“உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி விரைவில் இந்தியா வர இருக்கிறார். ஜெலென்ஸ்கியின் பயணத் திகதியை இறுதி செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இந்தியா வரும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, பிரதமர் மோடியை சந்திப்பார். அப்போது போர் நிலவரம் குறித்தும் ஆலோசனை நடத்துவார்கள். உக்ரைன் ஜனாதிபதியின் இந்திய பயணம் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்தும்.” என்று தெரிவித்துள்ளார்.

கனடா முரசு
திங்கட்கிழமை | 25/08/2025

**மசாஜ் நிபுணருக்கு எதிராக பாலியல் குற்றச்சாட்டுகள்**

கனடாவின் ஒன்டாரியோ வின் ஃபோர்ட் எரியில் உள்ள ஒரு சிகிச்சை மையத்தில் பணி புரிந்த மசாஜ் சிகிச்சையாளர் பாலியல் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளார் என 02▶



# உக்ரைனுக்கு ஆயுதங்களை அதிகளவில் வழங்கும் கனடா

**CA$1 பில்லியனுக்கும் அதிகமான (US$700 மில்லியனுக்கும் அதிகமான) மதிப்புள்ள உதவித் தொகுப்பின் ஒரு பகுதியாக உக்ரைன், கனடாவிலிருந்து ட்ரோன்கள், வெடிமருந்துகள் மற்றும் கவச வாகனங்களை இந்த மாதம் பெறவுள்ளது.**

**உக்ரைன் தலைநகர் கீவில் நடந்த சுதந்திர தின கொண்டாட்டங்களின் போது கனேடிய பிரதமர் மார்க் கார்னி இந்த ஆயுத உதவி தொடர்பான அறிவிப்பை வெளியிட்டார்.**

ஜூன் மாதம் G7 உச்சிமாநாட்டின் போது, கனடா உக்ரைனுக்கு கூடுதலாக CA$2 பில்லியன் (சுமார் US$1,45 பில்லியன்) இராணுவ உதவி வழங்கப்படுமென உறுதியளித்ததாக கார்னி மீண்டும் தெரிவித்தார்.

இந்தத் தொகையில் 1 பில்லியனுக்கும் அதிகமான தொகை, ட்ரோன்கள், வெடிமருந்துகள் மற்றும் கவச வாகனங்கள் வழங்குவதன் மூலம் உக்ரைனின் ஆயுதக் களஞ்சியத்தை வலுப்படுத்துவதற்காக செலுத்தப்படும் என்றும், அவை அடுத்த மாதம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

அவசர மருத்துவ உதவி, வெடிகுண்டு முகாம்களை நிர்மாணித்தல், உள்ளூர் ஜனநாயகத்திற்கான ஆதரவு மற்றும் உக்ரைனின் சைபர் பாதுகாப்பு ஆகியவற்றிற்காக கனடா கோடிக் கணக்கான டொலர்களை ஒதுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ரஷ்ய ஆக்கிரமிப்பை எதிர்கொள்வதிலும், போருக்குப் பிந்தைய மறுகட்டமைப்பு வேலைகளிலும் தனது நாடு உக்ரைனின் நம்பகமான கூட்டாளியாக இருக்கும் என்று கார்னி வலியுறுத்தினார். புடினை நிறுத்த முடியும் என்றும், ரஷ்யாவின் பொருளாதாரம் பலவீன மடைந்து வருவதாகவும், கூட்டணி வலுவாகவும், உறுதியானதாகவும், ஒற்றுமையாகவும் வளர்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.





# அமெரிக்கா வேண்டவே வேண்டாம்; கனடாவுக்கு செல்லும் இந்தியர்கள்

ட்ரம்ப் ஜனாதிபதியாக வந்த பிறகு அமெரிக்காவில் வெளிநாட்டினருக்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

இதற்கிடையே வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்தியர்கள் குறித்த சமீபத்திய தகவல்கள் பலருக்கும் அதிர்ச்சியை தருவதாகவே இருக்கிறது. அதாவது இந்தியர்கள் சமீப காலமாக அமெரிக்கா செல்வதையே தவிர்த்து வருகிறார்களாம். அதற்குப் பதிலாக கனடாவே முதல் தெரிவாக மாறி வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் படிப்பு மற்றும் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்தியர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. குறிப்பாக மேற்படிப்பை வெளிநாட்டில் படித்தால் அங்கேயே இருந்து விடலாம் எனப் பலரும் நினைப்பதால் வெளிநாடுகளுக்குப் படிக்க செல்வோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இப்படி வெளிநாட்டில் படிக்க செல்வோர் விரும்பி செல்லும் நாடுகளில் ஒன்றாகக் கடந்த காலங்களில் அமெரிக்கா இருந்தது. உயர்கல்விக்கு இந்திய மாணவர்களின் விருப்பமான நாடாக அமெரிக்கா இருந்து வந்தது. ஆனால், அண்மைக் காலமாக நிலைமை மாறிவிட்டது. அமெரிக்காவில் தொடர்ந்து உயரும் கல்விக் கட்டணங்கள், அதிகரித்து வரும் மாணவர் கடன், கடுமையான விசா விதிமுறைகள், அரசியல் சிக்கல்களால் இந்தியர்கள் அமெரிக்கா செல்லவே யோசிக்கிறார்களாம்.

அமெரிக்காவை மொத்தமாகப் புறக்கணிக்கும் இந்தியர்கள் மெல்ல கனடாவுக்குச் செல்ல ஆரம்பித்துள்ளனர். கனடா பல்கலைக்கழகங்களில் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. வெளியுறவு அமைச்சகத்தின் தகவல்படி, 2024 இறுதியில் கனடாவில் 4.27 லட்சம் இந்திய மாணவர்கள் இருந்தனர். இதுவே அமெரிக்காவில் 3.37 லட்சம் இந்திய மாணவர்கள் மட்டுமே இருந்தனர்.

வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்களில் 94 வீத பேர் கனடாவைத் தங்கள் முதல் விருப்ப நாடாகக் குறிப்பிட்டனர். கல்லூரி கட்டணம் குறைவாக இருப்பது, பாதுகாப்பு மற்றும் குடியேற்றத்திற்கு உகந்த கொள்கைகள் ஆகியவைதான் இதற்குப் பிரதானக் காரணமாக இருக்கிறது.

பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம் போன்ற முக்கிய கனடாவின் கல்வி நிறுவனங்களில் சர்வதேச மாணவர் சேர்க்கை ஏற்கனவே 27 வீதம் திகரித்துள்ளது. இது அமெரிக்காவில் நிலவும் ஸ்திரமற்ற சூழ்நிலையால் ஏற்பட்ட மாற்றமாகும்.

# 19 வயது தமிழ் இளைஞர் டொரோண்டோவில் கொலை

ஸ்கார்பரோ டவுன் சென்டர் வணிக வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற 19 வயது இளைஞரின் மரணம், கொலைவழக்காகக் கருதப்படுவதாக டொரோண்டோ பொலிஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

சனிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில், பலியானவர் டானியல் அமலதாஸ் (வயது 19) என அடையாளம் காணப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

வணிக வளாகத்தின் கழிப்பறையில் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொலிஸார் விசாரணையை ஆரம்பித்தனர்.



காவல்துறை இதை டொரோண்டோ நகரில் இந்த ஆண்டின் 27 ஆவது கொலை என அறிவித்துள்ளது.

இன்னும் அதிகாரப்பூர்வமாக மரணக்காரணம் வெளியிடப்படவில்லை. எனினும், இளைஞர் துப்பாக்கிச்சூட்டில் பலியானவர் என்று ஆரம்ப கட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சந்தேக நபர் தொடர்பான விவரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. சம்பவம் குறித்து தகவல் தெரிந்தவர்கள் பொலிஸாரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## மசாஜ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தனது வாடிக்கையாளர்களில் சிலரை சிகிச்சையின் போது பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேற்படி நபருக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

59 வயதான இவோ இவானோவ் என்ற நபரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர். விசாரணையாளர்கள், மேலும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம் என சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பாக தகவல் வைத்திருப்பவர்கள் நயாகரா காவல்துறையின் பாலியல் தாக்குதல் பிரிவை தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.